ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா2ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ருʼதி3 ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ புகழும் நல் ஒருவன் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ புகழும் நல் ஒருவன் ‖

## ஆன்மாக்கள் அனைத்தும் அவனே

‡புகழும் நல் ஒருவன் என்கோ!⋆
பொருவில் சீர்ப் பூமி என்கோ⋆
திகழும் தண் பரவை என்கோ!⋆
தீ என்கோ! வாயு என்கோ⋆
நிகழும் ஆகாசம் என்கோ!⋆
நீள் சுடர் இரண்டும் என்கோ⋆
இகழ்வில் இவ்வனைத்தும் என்கோ⋆
கண்ணனைக் கூவும் ஆறே! (1)

கூவும் ஆறறிய மாட்டேன்⋆ குன்றங்கள் அனைத்தும் என்கோ⋆
மேவுசீர் மாரி என்கோ!⋆ விளங்கு தாரகைகள் என்கோ⋆
நாவியல் கலைகள் என்கோ!⋆ ஞான நல்லாவி என்கோ⋆
பாவு சீர்க் கண்ணன் எம்மான்⋆ பங்கயக் கண்ணனையே! (2)

பங்கயக் கண்ணன் என்கோ!⋆ பவளச் செவ்வாயன் என்கோ⋆
அங்கதிர் அடியன் என்கோ!⋆ அஞ்சன வண்ணன் என்கோ⋆
செங்கதிர் முடியன் என்கோ!⋆ திருமறு மார்வன் என்கோ⋆
சங்கு சக்கரத்தன் என்கோ!⋆ சாதி மாணிக்கத்தையே! (3)

சாதி மாணிக்கம் என்கோ!⋆ சவி கோள் பொன் முத்தம் என்கோ⋆
சாதி நல் வயிரம் என்கோ⋆ தவிவில் சீர் விளக்கம் என்கோ⋆
ஆதியஞ்சோதி என்கோ!⋆ ஆதியம் புருடன் என்கோ⋆
ஆதுமில் காலத்தெந்தை⋆ அச்சுதன் அமலனையே! (4)

அச்சுதன் அமலன் என்கோ⋆
அடியவர் வினை கெடுக்கும்⋆
நச்சுமா மருந்தம் என்கோ!⋆
நலங்கடல் அமுதம் என்கோ⋆

www.prapatti.com

அச்சுவைக் கட்டி என்கோ!⋆
    அறுசுவை அடிசில் என்கோ⋆
நெய்ச்சுவைத் தேறல் என்கோ!⋆
    கனி என்கோ! பால் என்கேனோ! (5)

பால் என்கோ!⋆ நான்கு வேதப்
    பயன் என்கோ⋆ சமய நீதி
நூல் என்கோ!⋆ நுடங்கு கேள்வி
    இசை என்கோ!⋆ இவற்றுள் நல்ல
மேல் என்கோ⋆ வினையின் மிக்க
    பயன் என்கோ⋆ கண்ணன் என்கோ!
மால் என்கோ! மாயன் என்கோ⋆
    வானவர் ஆதியையே! (6)

வானவர் ஆதி என்கோ!⋆ வானவர் தெய்வம் என்கோ⋆
    வானவர் போகம் என்கோ!⋆ வானவர் முற்றும் என்கோ⋆
ஊனமில் செல்வம் என்கோ!⋆ ஊனமில் சுவர்க்கம் என்கோ⋆
    ஊனமில் மோக்கம் என்கோ!⋆ ஒளி மணி வண்ணனையே! (7)

ஒளி மணி வண்ணன் என்கோ!⋆ ஒருவன் என்றேத்த நின்ற⋆
    நளிர் மதிச் சடையன் என்கோ!⋆ நான்முகக் கடவுள் என்கோ⋆
அளி மகிழ்ந்துலகம் எல்லாம்⋆ படைத்தவை ஏத்த நின்ற⋆
    களி மலர்த் துளவன் எம்மான்⋆ கண்ணனை மாயனையே! (8)

கண்ணனை மாயன் தன்னைக்⋆ கடல் கடைந்தமுதம் கொண்ட⋆
    அண்ணலை அச்சுதனை⋆ அனந்தனை அனந்தன் தன் மேல்⋆
நண்ணி நன்குறைகின்றானை⋆ ஞாலம் உண்டுமிழ்ந்த மாலை⋆
    எண்ணும் ஆறறிய மாட்டேன்⋆ யாவையும் யவரும் தானே (9)

யாவையும் யவரும் தானாய்⋆ அவரவர் சமயந் தோறும்⋆
    தோய்விலன் புலன் ஐந்துக்கும்⋆ சொலப்படான் உணர்வின் மூர்த்தி⋆
ஆவிசேர் உயிரின் உள்ளால்⋆ ஆதுமோர் பற்றிலாத⋆
    பாவனை அதனைக் கூடில்⋆ அவனையும் கூடலாமே (10)

www.prapatti.com

‡கூடி வண்டறையும் தண் தார்க்⋆
    கொண்டல் போல் வண்ணன் தன்னை⋆
மாடலர் பொழில்⋆ குருகூர்
    வண் சடகோபன் சொன்ன⋆
பாடல் ஓர் ஆயிரத்துள்⋆
    இவையும் ஒரு பத்தும் வல்லார்⋆
வீடில போக மெய்தி⋆
    விரும்புவர் அமரர் மொய்த்தே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com